பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 09 | புதன்கிழமை | 22.05.2024 | அதிர்வு 295

## மின்சாரம் தாக்கி வர்த்தகர் மரணம்



(புத்தளம் நிருபர்)

புத்தளம், முந்தல் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி வர்த்தகர் ஒருவர் 06▶



# முதலில் பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி இரகசிய நடவடிக்கை

## ஊடகங்களிடம் டிலான் பகிரங்கம்



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தல்தான் முதலில் நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான ஏற்பாடுகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் இரகசியமாகச் செய்து வருகின்றார் என்றும் அவர் கூறினார். 06▶

# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அனுதாபம்! இலங்கையில் நேற்று துக்க தினம் அனுஷ்டிப்பு!!

## கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் மூடல்

(பாறுக் ஷிஹான்)

ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி உயிரிழந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இலங்கையில் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. 07▶





# பொன்சேகாவைச் சமாதானப்படுத்த சஜித் அணியினர் கடும் பிரயத்தனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் முரண்பட்டுக் கொண்டு அக்கட்சியின் செயற்பாடுகளில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி இருக்கும் அக்கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பியை வழிக்குக் கொண்டு வரும் பணியை அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஏற்றுள்ளார்.

சஜித் பிரேமதாஸவால் அவர் இந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்போதே அவர் முதற்கட்ட 06▶



காலங்கள் மாறினாலும் செய்தியாளர்களுக்கு வரும் பிரச்சினைகள் பெரும்பாலும் மாறாமல் ஒரே விதமானவையாகத்தான் இருக்கும் போலும். காலத்துக்குக் காலம் வடிவங்கள், விடயங்கள் மாறும். அவ்வளவுதான் வித்தியாசம்.

இதை விளக்குவதற்காக இன்று இந்தப் பழைய கதை.

1985 – 1986 ஆம் ஆண்டு காலம். யாழ்ப்பாணத்தில் நான்கு தினசரிகள் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பிரதான பொறுப்பில் நான் இருந்தேன். 25 – 26 வயது 06▶

# பயிரிடப்படாத நிலங்களில் செய்கையை மேற்கொள்ள அவசியமான சட்ட விதிகளை அறிமுகப்படுத்த ஏற்பாடு

## சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தகவல்



"சமூக வலுவூட்டலுக்கு நிலம் ஒரு முக்கிய காரணியாக இருப்பதால், பயிரிடப்படாத நிலங்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதற்கு அவசியமான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சமூக வலுவூட்டலுக்காக கல்வி முறையில் மாற்றம் வரவேண்டும். அதன்படி, கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், மதம், மொழி போன்ற பாடங்களில் சித்திபெறாமை, பரீட்சையில் சித்திபெறாததாகக் கருதக் கூடாது. எனவே, க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் பாடத் திட்டத்தில் திறன்விருத்தி மற்றும் தொழிற்கல்வி பாடத்தை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இத்தீர்மானத்தை அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் ஒரு முழுமையான நிபுணத்துவத்துவம் மிக்கவர்களை உருவாக்குவதற்குத் தேவையான கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

மேலும், சமூகத்தை வலுப்படுத்த நிலம் ஒரு முக்கிய காரணியாகும். எனவே, பயிர்ச்செய்கைக்கு ஏற்ற, ஆனால் இதுவரை பயிரிடப்படாத நிலத்தைப் பயன்படுத்தும் வகையில் புதிய சட்டங்களை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் முழு நாட்டையும் வலுவூட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்காக, அரச மற்றும் தனியார் துறையினர் மட்டுமின்றி அனைத்து சுயதொழில் செய்பவர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.

அதேபோல், ஒரு தொழில்முயற்சியாளர்களைக் கொண்ட நாட்டை உருவாக்க நாமும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதனுடன், அனைவரும் தொழில் கல்வியையும் பெற வேண்டும். நாட்டை அபிவிருத்திசெய்வதற்கும் முன்னேற்றுவதற்கும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காக "லியசவிய நிகழ்ச்சித்திட்டத்தையும்" நாங்கள் ஆரம்பித்துள்ளோம். மேலும், அஸ்வெசும பெறுபவர்களில் 12 லட்சம் பயனாளிகளுக்கு வலுவூட்டுவது எமது முக்கிய நோக்கமாகும். அதற்காக இந்த வருடம் 03 லட்சம் குடும்பங்கள் வலுவூட்டப்பட வேண்டும். அதற்குத் தேவையான சுமார் 188,000 ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

அதன்போது, உலக வங்கி திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் குடும்பங்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் 16 ஆயிரம் குடும்பங்களையும் வலுவூட்டுத் தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. அதற்காக அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சியும் இம்மாதம் நிறைவடையும்.

மேலும், இளைஞர் சேவைகள் மன்றம், தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் சிறுதோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து பல சமூக வலுவூட்டல் வேலைத்திட்டங்கள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றின் மூலம் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.,

# யாழ். மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் எதேச்சையாக இடமாற்றம் எனக் குற்றச்சாட்டு

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்டத்தில் நிரந்தர மாவட்ட அரச அதிபர் இல்லாத நிலையில் கடமை நிறைவேற்று அரச அதிபர் நூற்றுக் கணக்கான உத்தியோகத்தர்களை எதேச்சையாக இடமாற்றம் செய்கிறார் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு தற்போது நிரந்தர அரச அதிபரோ அல்லது பதில் அரசாங்க அதிபரோ இல்லாது கடமை நிறைவேற்று அரச அதிபரின் கீழ் செயல்படும் காலத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நூறுக்கும் மேற்பட்டோர் கடமை நிறைவேற்று அரச அதிபரால் இடமாற்றம் செய்யப்பட்டு விட்டனர்.

இதேநேரம் அடுத்த வாரம் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் 136 பேருக்கு இடமாற்றம் வழங்க அவசர ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்த இடமாற்றங்கள் எவற்றுக்கும் இடமாற்ற சபை நியமிக்கப்படவேயில்லை என்பதுடன், உத்தியோகத்தர்களின் விருப்பத் தேர்வோ அல்லது உத்தியோகத்தர்களின் குடும்ப நிலையோ அறியப்படவில்லை என்றும், இடமாற்றம் தொடர்பில் திணைக்களத் தலைவர்களின் சிபார்சுகள் கூடப் பெறப்படவில்லை என்றும் உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான இடமாற்றத்தினால் தாங்கள் பாதிக்கப்பட்டார்கள் எனக் கருதினால் அது குறித்து மேன்முறையீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள போதும், இந்த இடமாற்ற சபையின் தலைவரான கடமை நிறைவேற்று அரச அதிபரே, மேற்படி மேன் முறையீட்டு சபையின் தலைவராகவும் இருப்பதனால் தமக்கான நீதி கிடைக்காது எனவும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓர் மாவட்டத்தில் நிரந்தர அரச அதிபரோ அல்லது பதில் அரச அதிபர் இல்லாத சூழலில் அமைச்சின் செயலாளரின் அனுமதி இன்றி இடமாற்றம் மேற்கொள்ள முடியாது என்ற தாபனவிதிக் கோவையை மீறி இடமாற்றம் இடம்பெறுகின்ற போதும், மேல் அதிகாரிகளும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர் எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.



இவை தொடர்பில் மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றும் ம.பிரதீபனைத் தொடர்புகொண்டு கேட்டபோது –

கணக்காய்வு அறிக்கையில் 5 வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டதாலும், தீவுப் பகுதி, மருதங்கேணி போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக பணியாற்றும் உத்தியோகத்தர்களின் கோரிக்கை கருதியுமே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இதேபோன்றே எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐயவினா மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்திலும் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளிற்கு மேல் ஒரே இடத்தில் இருப்பவர்களை இடமாற்றம் செய்யவில்லை எனத் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பியதன் அடிப்படையிலுமே இந்த இடமாற்றங்கள். – எனப் பதிலளித்தார்.

# பரா உலக சாம்பியன்ஷிப் மெய்வன்மைப் போட்டியில் இலங்கை வீரர் சமித்த துலான் புதிய உலக சாதனை



2024 பரா உலக சாம்பியன்ஷிப் மெய்வன்மைப் போட்டிகளில் (World Para Athletics Championships) F44 பிரிவு ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இலங்கையின் சமித்த துலான் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டியில் 66.49 மீற்றருக்கு அவர் திறமையை வெளிப்படுத்தி இந்த புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.

இதனிடையே, பரா உலக சம்பியன்ஷிப் மெய்வன்மைப் போட்டிகளில் கு64 பிரிவு ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இலங்கையின் சமித்த துலான் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

இந்த போட்டியில் தங்கப் பதக்கத்தை இந்தியா பெற்றிருந்தது.

2024 பரா உலக சாம்பியன்ஷிப் மெய்வன்மைப் போட்டிகள் ஜப்பானின் முழடிந இல் இடம்பெற்று வருகின்றன.




# ஆசிய 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இலங்கை அணிக்குத் தங்கப்பதக்கம்!

ஆசிய அஞ்சலோட்டப் போட்டிகளில் ஆடவருக்கான 4 X 400 மீற்றர் நிகழ்ச்சியில் இலங்கை குழாம் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது.

தூரத்தை அவர்கள் 3 நிமிடங்கள் 4.48 விநாடிகளில் நிறைவுசெய்தார்கள்.

இந்திய குழாம் வெள்ளிப்பதக்கத்தையும் வியட்நாம் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.

ஆசிய அஞ்சலோட்டப் போட்டிகள் தாய்லாந்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# மாத்தறை சிறையில் மேலுமொரு கைதி மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சாவு

திடீர் சுகயீனம் காரணமாக மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மாத்தறை சிறைச்சாலை கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

24 வயதுடைய கைதியே உயிரிழந்துள்ளார். இவர் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தறை சிறைச்சாலையில் மற்றுமொரு கைதியும் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மாத்தறை சிறைச்சாலையில் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதிகளவிலான மரணங்களும் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த அனுமதித்தது அரசின் கோழைத்தனம்

## இப்படிச் சீறிப் பாய்கின்றார் கம்மன்பில

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முள்ளிவாய்க்காலில் நடத்த அனுமதித்தது இலங்கை அரசின் கோழைத்தனம் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கூறுகையில், "போரில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூரும் நிகழ்வே முள்ளிவாய்க்காலில் நடத்தப்பட்டது. அது போரில் இறந்த தமிழ் மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட நிகழ்வு அல்ல.

தாம் நேசித்த ஒருவரை, ஒரு மதச் சடங்கு அல்லது சமூக நிகழ்வின் மூலம் நினைவுகூர நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை யாரும் தடுக்க முடியாது.

எனினும், இந்த நிகழ்வு தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக நிகழ்த்தப்பட்டமையை நிகழ்விடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் கட்டப்பட்டிருந்த சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே, இந்த நினைவேந்தல் நிகழ்வை அரசு அனுமதித்திருக்கக்கூடாது." – என்றார்.

# ஈரான் ஜனாதிபதியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள அலி சப்ரி அங்கு பயணம்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஈரானின் தப்ரிஸ் நகரில் நடைபெறும் மறைந்த ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக நேற்று இரவு ஈரானுக்குப் பயணமாகியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்டவர்களின் இறுதி ஊர்வலம் ஈரானின் வடமேற்கு நகரமான தப்ரிஸில் நேற்று ஆரம்பமானது.

இந்த நிலையில் தப்ரிஸ் நகரில் உள்ள தியாகிகள் சதுக்கத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான ஈரானியர்கள், மறைந்த ஜனாதிபதிக்கும் பிற அதிகாரிகளுக்கும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து, ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் உடல் ஈரானின் தலை நகர் தெஹ்ரானுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

## முதல் ஹஜ் குழு நேற்று மக்காவுக்குப் புறப்பாடு



2024 ஆம் ஆண்டுகான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கான முதல் குழுவினர் இலங்கையில் இருந்து மக்கா நோக்கி நேற்றுக் காலை சென்றனர்.

2024 ஆம் ஆண்டுகான புனித ஹஜ் கடமை நிறைவேற்றுவதற்காக இம்முறை 3,500 பேருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், 68 பேர் கொண்ட முதலாவது குழுவினர் நேற்று மக்கா நோக்கிச் சென்றனர்.

இவர்களை வழியனுப்பும் நிகழ்வில் புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலிட் ஹமட் அல் கந்தானி , ஹஜ் குழுவின் தலைவர், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## கொழும்பு - புத்தளம் வரையான ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டது




நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையான ரயில் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நேற்று கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையான ரயில் மார்க்கத்தில் பயணிக்கும் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

கொழும்பிலிருந்து புத்தளம் வரையான ரயில் சேவையில் நாள் ஒன்றிற்கு 4 ரயில்கள் இயக்கப்படுகின்றன என ரயில்வேத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## கடந்த ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் அதிகரிப்பு



தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் கடந்த ஏப்ரல் மாதத்தில் அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதத்தில் 2.5 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், கடந்த மார்ச் மற்றும் பெப்ரவரி மாதங்களில் தொடர்ந்தும் 5 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம், ஏப்ரல் மாதத்தில் 3.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம், கடந்த மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவல்லாப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 2.3 சதவீதமாக அதிகரித்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## 50 மருந்துப் பொருள்களுக்கு சில்லறை விலை நிர்ணயிப்பு



50 மருந்துப் பொருள்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கவுள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகார சபையின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த வாரம் வெளியிட எதிர்பார்ப்பதாகவும் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

INDSRI FERRY

# வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலனிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

ANDROID APP ON Google play
Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞனான என்னிடமும் வயதுக் கேற்ற துடிப்பும் இருந்தது.

யாழ்குடா நாட்டில் எல்லா இயக்கங்களும் – புலிகள், ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் உட்பட எல்லா இயக்கங்களும் – முரண்பாடுகளுக்கு மத்தியிலும் செயற்பட்டுக் கொண்டிருந்தன. புலிகளின் யாழ் தளபதி கிட்டு எனக்கு நல்ல நண்பர். ஈ.பி.ஆர்.எல்.எவ். தளபதியாக இருந்த டக்ளஸ் தேவனந்தாவுடன் கூட பரிச்சயம் இருந்தது.

எனது பத்திரிகையின் சார்பில் எல்லா இயக்கங்களையும் கையாளும் பொறுப்பையும் நானே வரித்து, ஏற்றுக் கொண்டிருந்தேன்.

யாழ்ப்பாணம் கோட்டை, குருநகர், கைதடி, பலாலி என்று சிற்சில இடங்களுக்குள் அரச படைகளையும் பொலிஸையும் போராளிகள் குழுக்கள் முடக்கி வைத்திருந்தன. (யாழில் நிர்வாகம் அக்குழுக்களின் கைகளில்.)

உதாரணத்துக்கு யாழ் கோட்டை முகாமை எடுத்தால், அதிலிருந்து படைகள் வெளியே வராமல் முடக்குவதற்காக கோட்டையின் ஒவ்வொரு பக்கத்தை ஒவ்வொரு இயக்கம் பொறுப்பெடுத்து காவலரண் அமைத்து, கண்துஞ்சாமல், படை வெளியே வர அனுமதிக்காமல், காவலில் ஈடுபட்டிருந்தன. வேம்படிப் பக்கம் ஓரியக்கம், பொது நூலகப் பக்கம் இன்னொரு இயக்கம், மூத்திர ஒழுங்கை பக்க முகப்பில் ஒரு தரப்பு, சத்திரத்துச் சந்திப் பக்கத்தில் ஒரு குழு, ரெலிகொம் யூனிகேஷன் கட்டடப் பக்கம் இன்னொரு இயக்கம், பண்ணையை ஒட்டி இன்னொன்று.... இப்படி ஒவ்வொரு இயக்கமும் பொறுப்பு எடுத்து, வெறும் இயந்திரத் துப்பாக்கிகளையும் கிரனேட்டுகளையும் மட்டும் வைத்துக்கொண்டு, கோட்டையை விட்டு ஈ, காக்கா கூட வெளியே தலை காட்ட முடியாத முற்றுகையை அமைத்திருந்தன.

முகாமை விட்டு வெளியேற முடியாது முடக்கப்பட்டு இருக்கும் படையினர், தங்கள் இயலாமையினால் கோட்டையில் இருந்து நகரப் பகுதியை நோக்கி திடீர் திடீரென ஷெல் தாக்குதல்களை நடத்துவர். இதில் தினசரி பொதுமக்கள் சாவு தொடரும். கோட்டையைச் சுற்றிப் பாதுகாப்பான பதுங்குழிகள் அமைத்து, அவற்றுக்குள் பதுங்கி இருந்தவாறு முற்றுகைப் போரை நடத்தும் போராளிகள் பெரும்பாலும் இந்த ஷெல் மழையில் தப்பி விடுவர். நகரத்துக்குள் அப்பாவி பொதுமக்கள்தான் வாங்கிக் கட்டி உயிர்ப்பலியாவர். அல்லது படுகாயமடைவர்.

இதைத் தவிர்ப்பதற்கு நகரத்துக்குள் நெருக்கமாக பங்கர்கள் அமைக்கப் பட்டிருக்கும். இப்போது ஆஸ்பத்திரி வீதியில், ஆஸ்பத்திரிக்கு முன்பாக நடுவில் வாகனங்கள் தரிக்கும் இடங்களில் எல்லாம் அந்த வேளையில் மண் மூடைகள் மூலம் பதுங்கு குழிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன.

கோட்டையில் இருந்து ஒரு ஷெல் ஏவினால், அது வானத்தில் உச்சம் சென்று, நகரத்துக்குள் வந்து வீழ்வதற்கு 40 முதல் 50 செக்கன்களாவது எடுக்கும். கோட்டையைச் சூழக் காவலரணில் கண்ணும் கருத்துமாக இருக்கும் போராளிகள், கோட்டைக்குள் ஷெல் ஏவப்படும் சத்தம் கேட்டதும், அபாய எச்சரிக்கையை எழுப்புவர். யாழ் நகரம் முழுவதும் அலாரம் அலறும். வீதிகளில், கடைகளில் நிற்பவர்கள் போட்டது போட்டபடி இருக்க, பங்கர்களுக்கு உள்ளேயோ அல்லது கட்டடங்களுக்கு உள்ளேயோ பதுங்கிக் கொள்ள வேண்டும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பயணித்த போது, அலாரம் சத்தம் கேட்டு, மோட்டார் சைக்கிளை நடுவீதியில் போட்டுவிட்டு, பங்கர்களுக்குள் பதுங்கிய பல அனுபவங்கள் எனக்கு உண்டு.

இந்த ஷெல் தாக்குதல்களுக்கு எதிராகப் போராளிகளும் தமது காவலரண்களில் இருந்து தங்கள் தயாரிப்பு ஷெல்களை கோட்டைக்குள் அனுப்புவார்கள்.

போராளிகள், ஷெல்களை தாங்களே தயாரித்துக் கையாளத் தொடங்கிய ஆரம்ப காலம் அதுதான். ஷெல் குழாய்கள் சூட்டில் வெடித்து, ஷெல் ஏவிய இடத்தில் போராளிகள் நான்கு, ஐந்து பேராக உயிரிழந்த சம்பவங்களும் உண்டு.

அந்நிலையில் வெளிக் காவலரணிலிருந்து கோட்டைக்குள் ஸ்பொட்டாக ஷெல்லை வெற்றிகரமாக ஏவுவது என்பது ஒரு வீரம் செறிந்த சாதனையாகதான் இருந்தது.

இனி செய்தி பற்றிய விடயத்துக்கு வருகிறேன்.

ஒரு செய்தி, ஒரு நாளில் பிரசுரமானால், அதன் பின்னர் அன்று அதற்கு மாறான தகவலோ, செய்தியோ, மறுப்போ வந்தால் அதைச் சமாளிக்கலாம். செய்தி வரும் போதே, அது பிரசுரமாக முன்னரே, அதற்கு இன்னொரு தரப்பிலிருந்து மறுப்பும் சேர்ந்து வந்தால் அல்லது மாறுபாடான செய்தி வந்தால் என்ன செய்வது?

எல்லா இயக்கங்களும் அப்போதும் எல்லாப் பத்திரிகைகளுக்குள்ளும் தங்கள் உளவாளிகளை வைத்திருந்த காலம் அது. ஊடகங்களை 'கவனிப்பில்' வைத்திருப்பது இயக்கப் பணிகளில் ஒன்றாக கருதப்பட்ட காலமும் அது. பல பத்திரிகைகளும் பிற்காலங்களில் முடக்கப்பட்டமைக்கு இந்த உளவாளிகளின் கைவரிசையும் பங்களிப்பும் கூடக் காரணமாக இருந்தன. அவை பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் பேசலாம்.

கோட்டைக்குள் ஓர் இயக்கம் 4,5 ஷெல்களை வெற்றிகரமாக ஏவியது என்றால் ஓரிரு மணித்தியாலங்களில் அந்த இயக்கத்திடமிருந்து அந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரி அறிக்கை வரும். இத்தனை ஷெல்லை, இந்த முனையில் இருந்து நாம் வெற்றிகரமாக ஏவினோம், இத்தனை படையினர் கோட்டைக்குள் உயிரிழந்தனர், இத்தனை பேர் காயமடைந்தனர் என்றெல்லாம் கணக்கும் இருக்கும். செய்தியாளர் என்ற முறையில் கோட்டைக்குள் ஷெல் போய் விழுந்த சத்தம் நகரத்தில் எங்களுக்குக் கேட்டிருக்கும். அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். யுத்த முனைப் பக்கம் நாங்கள் தலை கூட வைக்காத நிலையில் யார்,எங்கிருந்து ஷெல் ஏவினார்கள், படைத்தரப்புக்கு என்ன இழப்பு என்பவை எல்லாம் நாம் அறிய முடியாத விடயங்கள். கோட்டைக்குள் நடந்த படைத் தரப்பு இழப்புகள் பற்றி அவர்கள் (போராளிகள்) எப்படி அறிந்தார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது. சில சமயங்களில் கோட்டைக்குள் ஹெலி வந்திறங்கிச் செல்வதை வைத்து சிலவற்றை ஊகிக்கலாம். அவ்வளவுதான்.

வந்த அறிக்கையை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கலாம். ஆனால் அதுவல்லப் பிரச்சினை. ஓர் இயக்கம் அப்படி ஓர் அறிக்கையை வெளியிட்டதும், அதே பத்திரிகையில் உள்ள உளவாளி மூலம் அறிந்து கொள்ளும் மற்ற இயக்கம், தாங்களும் அதே நேரத்தில் தாக்குதல் நடத்தினோம், படையினருக்கு இவ்வளவு இழப்பு என்று அறிக்கையோடு வந்திறங்குவர். சில சமயம் ஒரே தாக்குதலுக்கு இரண்டுக்கும் மேற்பட்ட உரிமைக் கோரலோடும் அறிக்கைகள் வரும்.

இந்தப் பிரச்சினைகளைக் கையாண்டு, எல்லா இயக்கங்களையும் சமாளித்து, சமரசப்படுத்தி, பத்திரிகையைக் கொண்டு நடத்துவது என்பது பெட்ரோல் பவுஸருக்கு ஊடாக தீப்பந்தத்தைக் கொண்டு செல்லும் நகாசு வேலையை ஒத்தது. இன்றைய ஊடகத் தரப்பினருக்கு – எங்களை எள்ளி நகையாடும் விமர்சகர்களுக்கு – ஐந்தாறு ஆயுதத் தரப்புகளுக்கு நடுவில் ஊடகப் பணியின் சிரமம் புரியாது. புரிய வைத்து சான்றிதழ் பெறவேண்டிய தேவையும் இன்று இல்லை.

அதுவல்ல விடயம். அதை ஏன் இப்போது நான் குறிப்பிடுகிறேன் என்ற கேள்வி எழலாம்.

சம்பூரில், முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறியமைக்காக கைதான நால்வரையும் பிணையில் எடுப்பது தொடர்பான விடயத்தில், விவகாரங்கள் நீதிமன்றத்திலும் அதற்கு வெளியிலும் எப்படிக் கட்டவிழ்ந்தன என்பதை ஊடகவியலாளர்கள் என்ற முறையில் நாம் அறிவோம். நன்கு அறிவோம்.

ஒரு தரப்பின் அந்தச் செயல் பெறுபேறுக்கு இன்னொரு தரப்பு ஆரவாரத்துடன் உரிமை கோரும் வீடியோக்களை பார்த்த போது, யாழ் கோட்டையைச் சுற்றிக் காவலரண் அமைத்திருந்த பல்வேறு இயக்கங்களைப் பற்றியும், கோட்டைக்குள் நடக்கும் ஷெல் தாக்குதலுக்குப் போட்டி போட்டுக்கொண்டு அவை உரிமை கோருவதும்தான் நினைவுக்கு வந்தன.

அதனால்தான் அந்தப் பழைய கதை பற்றிய எனது இந்தப் புலம்பல்....!

## மின்சாரம் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, இம்புல்கொட பிரதேசத்தைச்சேர்ந்தவர்த்தகரேஇவ்வாறுஉயிரிழந்துள்ளார்.

இவர் புத்தளம், முந்தல் பிரதேசத்தில் உள்ள தனது கால்நடைப் பண்ணையில் மின் இணைப்புக்களைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும்போதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இந்த மரணம் இடம் பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## முதலில் பொதுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பின்படி, இந்த வருடம் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி விரும்பினால் அதற்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் அதிகாரம் அவருக்குண்டு.

எல்லோரும் ஜனாதிபதித் தேர்தல் தான் முதலில் நடத்தப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதியோ நாடாளுமன்றத் தேர்தலைத்தான் முதலில் நடத்துவதற்கு இரகசியமான முறையில் திட்டமிட்டு அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றார்.

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கி வரும் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷகூட, நாடாளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால் அரசுக்கு ஏற்படப் போகும் நன்மை பற்றி ஜனாதிபதிக்குப் பஸில் விளக்கிக் கூறியுள்ளார். அதன் அடிப்படையில்தான் ஜனாதிபதி மேற்படி முடிவை எடுத்துள்ளார். ஆனால், அவர் வெளியே ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடத்தப்படும் என்று காட்டுகின்றார்." – என்றார்.

## பொன்சேகாவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சுவார்த்தையைப் பொன்சேகாவுடன் தொடங்கியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவிக்கின்றது.





# மூன்று கூட்டங்கள் ஊடாக காலி மாவட்டத்தின் கருத்துக்களை பெறும் இடைக்கால செயலகம்

இனப்பிரச்சினை மற்றும் போருக்குப் பின்னரான நிலைமைகள் தொடர்பில் கருத்துப்பரிமாறவும் அது தொடர்பில் கவனம் செலுத்தும் முயற்சியாகவும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம் காலி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் மூன்று கூட்டங்கள் மூலம் பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றது.

அரச அதிகாரிகள் முதல் கீழ்மட்ட அமைப்புக்கள் வரை பலதரப்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்த கலந்துரையாடலில் அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், கீழ்மட்ட அமைப்புகளை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட நபர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

நல்லிணக்கச் செயற்பாட்டில் உள்நாட்டு செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை காலி மாவட்ட பதில் செயலாளர் சி.பி. ராஜகருணா மற்றும் மாவட்ட நிர்வாகம் வலியுறுத்தினர்.

ஆணைக்குழுவின் முன்னேற்றம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொதுமக்களின் விழிப்புணர்வை உறுதி செய்தல் குறித்தும் பிராந்திய செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர்கள், மாகாண சபை திணைக்களத் தலைவர்கள் ஒருங்கிணைந்த மாகாண பொறிமுறைகளின் அவசியத்தை வலியுறுத்தியமையுடன் கலந்து கொண்டோருக்கு அது தொடர்பில் புரிந்துணர்வை வழங்கினர்.

முன்னாள் இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சமூக பிரதிநிதிகளினால் சமூகக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இன்றியமையாத அடிமட்டச் செயற்பாடுகளை பிரதானமாக முன்வைத்தனர்.

பாலினம் முதல் சமூக நலன் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் வரையிலான முக்கிய பிரச்சினைகள் இங்கு ஆராயப்பட்டன. ஆணையாளர்கள் தெரிவில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவது மற்றும் விதவைகளுக்கு கொடுப்பனவுகள் மற்றும் சம்பளத்தில் 50 வீத உரிமையுடன் மறுமணம் செய்யவதற்கு ஏற்ற வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்வது போன்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

இது தவிர, போதிய ஆதரவு கிடைக்காமையினால் பாதிக்கப்படக் கூடிய அங்கவீனமடைந்த படைவீரர்கள் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

தேசிய நல்லிணக்க நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் கூட்டுப் பொறுப்பை வலியுறுத்தி, குணப்படுத்துதல், நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதியை வளர்ப்பதற்கு ஆணைக்குழுவிற்கு இருக்கும் திறன் குறித்த ஆலோசனைகள் பெறும் செயற்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவம்ச, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் கொள்கைப் பிரிவின் தலைவர் கலாநிதி யுவி தங்கராஜா, நிறைவேற்று அதிகாரி தனுஷி டி சில்வா, இணைப்பாளர் சரத் கொத்தலாவல, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி வை.எல். லொகுனாரங்கொட மற்றும் இடைக்காலச் செயலகத்தின் மக்கள் தொடர்பு மற்றும் கொள்கைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





## ஈரான் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஆங்காங்கே வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி, ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியன் உள்ளிட்ட 9 பேர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தனர். அவர்களை நினைவுகூரும் வகையில் – அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நேற்றைய தினத்தைத் துக்க தினமாக இலங்கை அரசு பிரகடனப்படுத்தியிருந்தது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தும்பை விட்டு விட்டு....!

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற போக்கில் தங்களை சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு குழுவினர் இன்னும் தீவிரமாகச் செயல்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் தும்பை விட்டுவிட்டு வாலை பிடிக்கின்றனர் என்றே தோன்றுகின்றது.

மாட்டையோ, கன்றையோ முளைக்குச்சியில் கட்டிப்போடுவதற்காக அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நீளம் அதிகம் இல்லாத கயிறுக்கு 'தும்பு' என்பார்கள். மாட்டைக் கட்டிப்போட வேண்டுமென்றால் தும்பைத்தான் பலமாகப் பிடிக்க வேண்டுமே தவிர, அதன் வாலை அல்ல. வாலைப் பிடித்தால் என்னவாகும்? மாடு மிரண்டு ஓடிவிடும், காரியம் கெட்டுவிடும்.

சரியோ, பிழையோ ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் இரண்டொரு மாத கால வித்தியாசங்களில் வரப்போவது பெரும்பாலும் உறுதி. எது முந்தும், எது பிந்தும் என்பதுதான் கேள்வி.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழர் தரப்பு என்ன நடவடிக்கை எடுத்தாலும் - பகிஷ்கரித்தாலும் சரி, பொது வேட்பாளரை நிறுத்தினாலும் சரி, இல்லை, தென்னிலங்கை வேட்பாளர்களில் ஒருவரை ஆதரித்தாலும் சரி - அத்தேர்தலில் தென்னிலங்கையின் மூன்று பிரதான வேட்பாளர்களில் ஒருவரே ஜனாதிபதியாவார். அதை மாற்றக்கூடிய அதிகார வலிமையோ, வாக்குப் பலமோ தமிழர் தரப்பிடம் இல்லை.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை முக்கியமானது - மிக முக்கியமானது - நாடாளுமன்றத் தேர்தல்தான். நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் தரப்புக்களின் பிரதிநிதித்துவ வலிமை 22 இலிருந்து ஏறக்குறைய அரைவாசியாகிய நிலைமை இப்போது. அடுத்த பொதுத் தேர்தலுடன் அது ஒற்றை இலக்கத்துக்குள் வீழும் ஆபத்து நெருங்கி உள்ளது.

நாம் நேரத்துடன் சுதாகரித்து, தமிழ் தேசிய தரப்புகள் எல்லாம் கிழக்கில் ஒன்றுபடுவதை உறுதிப்படுத்தாவிட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய தரப்புகளின் எம்.பிக்கள் எண்ணிக்கை கிழக்கில் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து - ஆக ஒன்றே ஒன்றாகக் குறைந்து விடும் பேராபத்து உள்ளது.

தமிழ்தேசியத்தரப்புக்கள்கடந்தபொதுத் தேர்தலை ஓரளவு ஒற்றுமைப்பட்டு அணுகியமையால் திருகோணமலையில் ஒன்று, மட்டக்களப்பில் இரண்டு என கிழக்கில் மூன்று ஆசனங்களைப் பெற முடிந்தது. இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. இந்த முறைமையில் தேர்தலை அணுகினால் மட்டக்களப்பில் மட்டும் தேசியத் தரப்புகளுக்கு ஆக, ஒரேயொரு ஆசனம் பெறும் அவலம் நேர்ந்து விடும்.

வடக்கில் நிலைமை எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். 'மீன் கரைந்தால் சட்டிக்குள்தான்' என்பார்கள். வடக்கில் தமிழ் கட்சிகள் பிளவு பட்டு பொதுத்தேர்தலை அணுகினாலும் பிரதிநிதித்துவம் பெரும்பாலும் தமிழர் தரப்புக்குள்தான் பகிரப்படும்.

அதுவும் கூட சில சமயங்களில் யாழ் மாவட்டத்தில் ஏழு ஆசனங்களும் ஏழு கூட்டுக்களுக்கு தலா ஒன்று என்ற வீதத்தில் பிரிந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அதுவும் வீடு, குத்துவிளக்கு, சைக்கிள், வீணை, கை, மான் அத்தோடு ஒன்று (சில சமயம் தொலைபேசி, யானை அல்லது பலரும் இப்போது பேசும் 'ஈழம் தமிழரசு' எனப் புதுக் கட்சி ஏதோ ஒன்று) என வர வாய்ப்புகள் உண்டு.

இந்தச் சமயத்தில் குடிமைசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்று தங்களைப் பெயர் சூட்டிக் கொள்ளுவோரின் பிரதான கடமை தமிழ்த் தேசிய கட்சிகளையும் தரப்புகளையும் குறைந்தபட்சம் கிழக்கிலாவது ஒன்றிணைத்துப் பொதுத்தேர்தலை அணுகச் செய்வதற்கான தந்திரமாகத்தான் - தந்திரோபாயமாகத்தான் - இருக்க வேண்டும்.

அதற்குத்தான் அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அதை விடுத்து, பொது வேட்பாளர் என்ற சாத்தியபாடற்ற விடயத்தை ஒட்டி, ஒரு தேவையற்ற நிழல் யுத்தத்தை நடத்தி, அதன் அடிப்படையிலேயே அரசியல் கட்சிகள், அமைப்புகளுக்கு இடையே குரோதத்தையும் விரோதத்தையும் வெறுப்பையும் எதிர்ப்புக்களையும் வளர்ப்பதல்ல.

அதனால்தான் குடிமை அமைப்புகள் தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க முயலுகின்றனவா என்ற சந்தேகத்தைக் கிளப்ப வேண்டி நேர்ந்து உள்ளது.

தமிழரசு கட்சியின் முடிவையும், அதை ஒட்டிய மற்றைய கட்சிகளின் தீர்மானங்களையும் புரிந்து கொண்டு குடிமைசார் அமைப்புக்கள் தங்கள் அணுகுமுறையை நாடாளுமன்ற தேர்தலை ஒட்டிய ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சிக்குத் திருப்ப வேண்டும் என்று உரிமையுடன் கோருகின்றோம்.

# தமிழகத்தினைச் சேர்ந்தவர் ஒடிசாவை ஆட்சி செய்வதா?

## அமித் ஷா கேள்வி



தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் ஒடிசாவை ஆட்சி செய்வதா என்று பா.ஜ.க. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒடிசாவின் புரி நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அமித் ஷா உரையாற்றுகையில்,

"இந்தத் தேர்தல் மோடியை மூன்றாவது முறையாக பிரதமராக்குவதற்கான தேர்தல். இந்த தேர்தல் 3 கோடி லட்சாதிபதிகளை உருவாக்கும் தேர்தல். இந்தத் தேர்தல் 4 கோடி ஏழைகளுக்கு வீடு கட்டித் தருவதற்கான தேர்தல். இந்தத் தேர்தல், ஜெகந்நாதரின் பெருமையையும் சுயமரியாதையையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கான தேர்தல்.

நாட்டிலேயே மிகவும் வளமான மாநிலம் ஒடிசா. கனிம வளம் நிறைந்த மாநிலமாக இருப்பினும் மக்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். மக்களின் ஏழ்மையைப் போக்க வேண்டுமானால், மோடிக்கு வாக்களித்து அவரை மீண்டும் பிரதமராக்க வேண்டும்.

நவீன் பட்நாயக்குக்கு நீங்கள் 25 ஆண்டுகள் கொடுத்தீர்கள். 25 ஆண்டு கால அவரது ஆட்சியில், சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு என அனைத்தும் தடம் புரண்டுள்ளன. நவீன் பாபுவின் அரசு போலி அரசு. மோடி, ஒவ்வொரு மாதமும் ஏழைகளுக்கு 5 கிலோ இலவச உணவு தானியங்களை வழங்குகிறார். நவீன் பாபு, அதன் மீது தனது ஸ்டிக்கரை ஒட்டி ஏழைகளுக்கு வழங்குகிறார். ஏழைகளின் வயிறு ஸ்டிக்கர்களால் அல்ல, அரிசியால் நிரப்பப்படுகிறது என்பதை நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலில் நீங்கள், பிரதமர் மோடியை மீண்டும் வெற்றி பெறச் செய்ய வேண்டும். மேலும், ஒடிசா சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க 75 இடங்களில் பா.ஜ.கவை வெற்றி பெறச் செய்ய வேண்டும். ஒடிசாவில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சியமைக்க முடியுமா? ஒடிசாவின் முதல்வராக வரக்கூடியவர், ஒடியா மண்ணைச் சேர்ந்தவராகவும், ஒடியா மொழி பேசக் கூடியவராகவும் இருக்க வேண்டும்."– என்றார்.

# 'தமிழ்ப் பற்றாளர்' வேடத்தினை பிரதமர் மோடி கலைத்துவிட்டார்

## முதல்வர் ஸ்டாலின் மீண்டும் விமர்சனம்



"தமிழகத்தில் தேர்தல் முடிந்ததும், தனது "தமிழ்ப் பற்றாளர்" வேடத்தை பிரதமர் மோடி கலைத்துவிட்டார்."

– இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

ஒடிசாவின் அங்குல் நகரில் பா.ஜ.க. சார்பில் நேற்று முன்தினம் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பிரதமர் மோடி, புரி ஜெகந்நாதர் கோயிலின் பொக்கிஷ அறை சாவி காணாமல் போன விவகாரம் குறித்து பேசினார். அதில், "நமது வீட்டு சாவி காணாமல் போனால் ஜெகந்நாதரிடம் முறையிடலாம். ஆனால் ஜெகந்நாதர் கோயில் பொக்கிஷ அறையின் சாவியை 6 ஆண்டுகளாக காணவில்லை. இந்த சாவி தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்" என்றார்.

தமிழகத்தின் மதுரையை சேர்ந்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி வி.கே.பாண்டியன் பி.ஜே.டி. கட்சியின் முக்கிய தலைவராக உருவெடுத்துள்ள நிலையில் அவரது பெயரை குறிப்பிடாமல் பிரதமர் மறைமுகமாக சாடினார்.

தமிழர்களை பொதுவாக குறிக்கும் விதமாக பிரதமர் மோடி இவ்வாறு பேசியதற்கு முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் பிரதமர் மோடி பேசிய வீடியோவை பகிர்ந்து, "தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்ததும், தனது "தமிழ்ப் பற்றாளர்" வேடத்தைக் கலைத்துவிட்டார் பிரதமர் மோடி.

ஒடிசாவில் உள்ள புரி ஜெகந்நாதர் கோயிலின் சொத்துகளைக் களவாடும் திருடர்கள் போலத் தமிழர்கள் மீது பொய்ப்பழி சுமத்தியிருக்கிறார். வடக்கில் தமிழர்களைக் காழ்ப்புணர்வுடன் தூற்றுவதும், மாநிலங்களுக்கிடையே குரோதத்தைத் தூண்டுவதும் ஒரு பிரதமருக்கு அழகா?

வாக்குகளுக்காக, தான் வகிக்கும் பொறுப்பின் கண்ணியத்தை மறந்து, நாளுக்கு நாள் இவ்வளவு தரக்குறைவாக நடந்துகொள்வதை பிரதமர் நிறுத்திக்கொள்ள வேண்டும்." என்று பதிவிட்டுள்ளார்.

# ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த இலங்கையரிடம் இந்திய புலனாய்வுத் துறை தீவிர விசாரணை



இந்தியா – குஜராத் விமான நிலையத்தில் பயங்கரவாத எதிர்ப்பு அணியால் கைது செய்யப்பட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் கூறப்பட்ட 4 இலங்கையர்கள் தொடர்பிலும் இலங்கையின் அரச புலனாய்வு பிரிவினர் உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் இந்திய – குஜராத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி சந்தேக நபர்கள் இந்திய பொலிஸாரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள் அகமதாபாத்திற்கு வந்த நோக்கத்தை கண்டறியும் வகையில் முதல் கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், திட்டமிட்ட இலக்கை அடைவதற்கு முன்பே குஜராத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.





# ஈரான் ஜனாதிபதியின் இறுதிப் பயணம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி

ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி, வெளிவிகார அமைச்சர் ஹொசைன் அலி அப்துல்ஹானியான் உள்ளிட்ட 7 பேரினதும் ஜனாஸாக்களை அந்த நாட்டின் முக்கிய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

ஈரானின் தப்ரிஸில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் கூடி தமது மறைந்த ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சிக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த அதிபர் இப்ராஹிம் ரெய்சியின் உடல் அவரது பிறந்த இடமான ஆயளாயன இல் நாளை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அந்த நாட்டு நேரப்படி நேற்று காலை 9.30 மணிக்கு ஈரானின் தென்மேற்கு நகரான Tabriz இல் முதலாவது இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து ஈரானின் புனித நகரான Qom நகருக்கு ஜனாஸாக்கள் கொண்டு செல்லப்படவுள்ளன.

இதேவேளை, ஈரானில் ஐந்து நாள்கள் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈரானில் உள்ள மலைப் பகுதியில் இராணுவ ஹெலக்கொப்டர் வீழ்ந்து நொருங்கி விபத்திற்குள்ளானதில், அந்த நாட்டு ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி (வயது 63) உயிரிழந்தார்.

ஹெலிக்கொப்டரில் உடன் சென்ற வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியன் உள்ளிட்ட 8 பேரும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

ஈரான் - அசர்பைஜான் இடையே அராஸ் நதியின் குறுக்கே இரு நாடுகளும் இணைந்து கட்டிய அணை ஒன்றின் திறப்பு விழாவில் பங்கேற்று விட்டு கோமர்லு நகரில் இருந்து ஈரானின் Tabriz நகருக்கு அதிபர் உள்ளிட்டோர் 3 இராணுவ ஹெலிகாப்டர்களில் புறப்பட்டனர்.

இதன்போது ஏனைய இரண்டு ஹெலிக்கொப்டர்களும் தரையிறங்கிய போதும், ஜனாதிபதி இப்ராஹீம் ரைசி, வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் உள்ளிட்டோர் பயணித்த ஹெலிக்கொப்டருடனான தொடர்பு துண்டிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில், மலைப் பகுதியில் ஹெலிக்கொப்டர் நொறுங்கிக் கிடப்பதை துருக்கியின் ட்ரோன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கண்டுபிடித்தது.

பின்னர், ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் விபத்தில் உயிரிழந்தனர் என உறுதி செய்யப்பட்டது.







# நடுவானில் திடீரென குலுங்கிய விமானம் பயணி ஒருவர் உயிரிழப்பு, 30 பேர் காயம்







லண்டனிலிருந்து சிங்கப்பூர் நோக்கி பயணித்த விமானம் நடுவானில் திடீரென குலுங்கியதில் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

லண்டனின் ஹீத்ரோவிலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட சிங்கப்பூர் எயார்லைன்ஸின் எஸ்.கியூ. 321 போயிங் 777-300 ஈ.ஆர். என்ற விமானம் நடுவானில் திடீரென குலுங்கியதாகக் கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தால், விமானம் உடனடியாக தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டு, காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனிடையே, உயிரிழந்த பயணி பிரித்தானிய பிரஜை என தகவல் வெளியாகியுள்ளது.

எஸ்.கியூ. 321 விமானம் வங்காள விரிகுடாவைக் கடந்த சில நிமிடங்களில், அதன் பயண உயரத்திலிருந்து 6,000 அடி (1,800 மீ) கீழே இறங்கியதாக விமான கண்காணிப்பு தரவு தெரிவிக்கிறது.

விமானத்தில் 211 பயணிகள் மற்றும் 18 பணியாளர்கள் இருந்தனர் என விமான நிறுவன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலையில் ஏற்பட்ட மாற்றம் விமானம் குலுங்கக் காரணமாக இருந்ததாக கூறப்பட்டுள்ளது.



# சீரற்ற காலநிலையால் பத்து மாவட்டங்களில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 10 மாவட்டங்களில் 33,000 க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அதன்படி, இரத்தினபுரி, கொழும்பு, கேகாலை, அநுராதபுரம், கண்டி, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

அதில், 1,827 பேர் தற்காலிகமாக பாதுகாப்பான பதினொரு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையோடு, அவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினன் திங்கட்கிழமை இரவு திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கொழும்பு திம்பிரிகஸ்யாய பகுதியில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஒவ்வொரு பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, ஹபுத்தளை, ஹாலிஎல, பதுளை மற்றும் எல்ல பகுதிகளுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜாங்கனை, அங்கமுவ மற்றும் மகாவிலச்சிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. குருநாகல் மாவட்டத்தில் தெதுரு ஓயாவின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தின் உள்ஹிட்டிய ஓயா மற்றும் ரத்கிந்த ஓயாவின் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. புத்தளம் தப்போவ நீர்தேக்கம் மற்றும் கலவானையில் உள்ள குகுலே கங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றது.

நாட்டின் பல மாவட்டங்களில் பெய்து வரும் மழையுடனான வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகூடிய பாதிப்பு புத்தளம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அங்கு 32 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, கல்பிட்டி , வண்ணாத்தவில்லு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்களே வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் 12 கிராம சேவகர் பிரிவுகளில் 6,815 குடும்பங்களை சேர்ந்த 25,529 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முந்தல் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளில் 855 குடும்பங்களை சேர்ந்த 3,042 பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 537 குடும்பங்களை சேர்ந்த 1,775 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு 10 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 6 தற்காலிக முகாம்களும், முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 3 தற்காலிக முகாம்களும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் ஒரு தற்காலிக முகாமும் அமைக்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் நிலவும் வெள்ள நிலைமையினால் மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்றும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளுக்கும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சியினை எதிர்பார்ப்பதாக திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தொடரும் பருவப் பெயர்ச்சி மழையினால் மேலும் சில தினங்களுக்கு மழையுடனான வானிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்தனகல்லு ஓயா, உருவல் ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன் திவுலபிட்டிய, மீரிகம, அத்தனகல்ல, மஹர, மினுவாங்கொட , ஜா எல, கடான, வத்தளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் குடா கங்கை, மகுரு கங்கையில் சிறு வெள்ள நிலைமை ஏற்படும் எனப் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக புலத்சிங்கள, மதுராவ, பாலிந்த நுவர பிரதேச செயகத்திற்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையினால் குக்குலே கங்கை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குடா கங்கை வான் பாய்ந்தமையினால், புலத்சிங்கள , மோல்காவ பிரதான வீதி, தம்பல, நாலியத்த, எட்டம்பகஸ் சந்தி உள்ளிட்ட பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தப்போவ நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று மழையுடனான வானிலை நிலவாத நிலையில், குடிசேட் மாவத்தை, சமகி மாவத்தை, கோலிததிஸ்ஸ மாவத்தை உள்ளிட்ட நகரங்கள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேவேளை ஹெமில்டன் கால்வாயில் இருந்து நீர் வழிந்தோடியமையினால், கொழும்பு பிரதான வீதியின் மஹவெவ உள்ளிட்ட சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

மழையுடனான வானிலை காரணமாக தெதுரு ஓயாவின் 4 வான் கதவுகள் 3 அடி வரை திறந்து விடப்பட்டுள்ளன.

நில்வலா கங்கையின் நீர் மட்டம் தற்போது உயர்வடைந்துள்ளது.

கிங் கங்கையினை அண்மித்த பகுதியில் உள்ள தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையுடன், பத்தேகம வக்வெல்ல வீதியின் எகலிய பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கலாவாவியின் இரண்டு வான் கதவுகளும் ஒரு அடிக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 22.05.2024

## மேஷம்

இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கியமான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணி யின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.

## மிதுனம்

ஆன்மீகத்துக்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.

## கடகம்

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிகவும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்திகரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## கன்னி

இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணிகளை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

## துலாம்

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவனமாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவுகளை இன்று எடுப்பது உசிதமல்ல.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.05.2024




தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பராமரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத்தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்படலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்காது. பணியில் ஏற்படும் தவறுகளால் கவலை கொள்வீர்கள். எச்சரிக்கை தேவை.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. இன்று பணத்தை சிறப்பாக கையாள முடியாத சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.









# நடந்து நாட்டைச் சுற்றி வருபவருக்கு சாய்ந்தமருதில் மக்கள் பெருவரவேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை முழுவதுமாக நடை பயணம் ஈடுபட்டுள்ள அம்பாறை மாவட்டம், மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கை இராணுவ அதிகாரி பெரேரா சாய்ந்தமருதை வந்தடைந்தபோது அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் புத்திக, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன், சாய்ந்தமருது பொலிஸ் சிறு குற்றப் பிரிவுக்கு பொறுப்பான பத்மசிறி, கல்முனை இராணுவ இரண்டாம் கட்டளை தளபதி சாமர மதுரபெரும மற்றும் தொழிலதிபர் எம் எம் நளீம், இக்ரா நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் யூ.எல். ஜலால் மற்றும் பிளாஸ்டர் விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.





# மதுரங்குளியில் மாணவனைக் காணோம்




(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி முன்மாதிரிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவனை கடந்த மூன்று நாள்களாகக் காணவில்லை என அம்மாணவனின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல் போனவர் மதுரங்குளி முன்மாதிரி பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் நெது சர பிரியனந்த எனும் 12 வயதுடைய மாணவன் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த மாணவன் மதுரங்குளி நகரை அண்மித்த நவகம்மானய பகுதியில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவனின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், மாணவன் பாட்டி வீட்டில் வசித்து வந்துள்ளார். கடந்த வெள்ளியன்று 18 ஆம் திகதி யாருக்கும் சொல்லாமல் வீட்டில் இருந்து வெளியேறிய மாணவன் இன்னமும் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

மாணவன் காணாமல் போன சமயம் வெள்ளை நிற சேட்டும், நீல நிற காற்சட்டையும் அறிந்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

காணாமல்போன மாணவன் தொடர்பில் தகவல் ஏதும் தெரிந்தால் உடனடியாக 0322268221 எனும் பொலிஸ் நிலைய இலக்கத்திற்கு அல்லது 0718592927 எனும் பொறுப்பதிகாரியின் இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறு மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.கே. காமினி விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

# கிளிநொச்சி சந்திரன் பூங்காவை விட்டு இராணுவத்தை வெளியேறுமாறு கோரி மக்கள் முன்னணி போராட்டம்



(கனகராசா சரவணன்)

கிளிநொச்சியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சந்திரன் பூங்காவை விட்டு இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி நேற்று செவ்வாய்கிழமை பூங்காவின் முன்னால் தமிழ் தேசய மக்கள் முன்னணியினர் பாதுகாப்பு படையினரது கெடுபிடிகளுக்கு மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மண்ணின் சொத்தான சந்திரன் பூங்காவை இலங்கை இராணுவத்தினர் ஆக்கிரமித்து முகாமிட்டுள்ளனர், எனவே பூங்காவை விட்டு இராணுவத்தினரை வெளியேறு கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் ஊடக பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுகாஸ் தலைமையில் கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் நேற்று அந்த பகுதியில் ஒன்றிணைந்தனர்.

இதனையடுத்து அங்கு பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸார் ஆர்பாட்காரர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முயற்சித்தபோதும் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் போராட்டக்காரர்கள் சுமார் 2 மணித்தியாலங்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்

# மத்ரசாவில் கல்வி கற்கும் மாணவனை காணவில்லை

## தகப்பன் பொலிஸில் முறைப்பாடு

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தின் மொறவெவ பொலிஸ் பிரிவில் உள்ள றொட்டவெவ பகுதியில் உள்ள மஃரூட் அஸ்மட் (வயது15) எனும் மாணவனைக் காணவில்லை என மொரவெவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாணவன் அநுராதபுர ஈமானியா அறபுக் கல்லூரியில் கற்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 16.5 2024 திகதி முதல் மாணவன் காணாமல் போயுள்ளான் எனப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவன் அறபு மத்ரசாவில் இருந்து 10.05.2024 அன்று றொட்டவெவ கிராமத்துக்கு வருகை தந்திருந்த நிலையில் 16.05.2024 அன்று காணாமல் போயுள்ளான். 18.05.2024 திகதி அன்று தனது மகன் காணாமல் போனமை தொடர்பில் மொறவெவ பொலிஸில் காணாமல் போன மாணவனின் தந்தை முறைப்பாடு செய்துள்ளார் எனவும் தெரியவருகிறது.





இந்தச் சம்பவம் தொடர்பில் மொறவெவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# தோற்றவர் பிரபாகரன்தான்;தமிழ் மக்கள் அல்லர்!
# அவர்கள் தோற்கவும் மாட்டார் என்கிறார் டக்ளஸ்



கடந்துபோன நாள்களிலிருந்து பாடம் கற்காவிட்டால் காலம் அந்த நாள்களைத் திருப்பித் திருப்பிக் கொடுத்துக்கொண்டே இருக்கும். இதுவே உண்மையும் கூட எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அழிவு யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டபோதும் தமிழ் மக்களின் எதிர்க் காலத்துக்கான மீளெழுச்சி மற்றும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையிலன்றி இதர தமிழ்த் தரப்பினர் செயற்படுவது மக்கள் நலன் சார்ந்த போகு அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய சாலையின் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ஆயுதப் போராட்டம் முன்னெடுக்க முன்னர் மக்கள் யாரிடமும் கஞ்சிக்காக மட்டுமல்ல எந்தவொரு தேவைக்கும் கையேந்தியிருக்கவில்லை. ஆனால் 1987 களின் பின்னரான திசைவழிமாறிய ஆயுதப் போராட்டமே இவ்வாறான நிலைக்குத் தமிழ் மக்களை தள்ளியுள்ளது. இது மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

ஆனால் இவ்வாறான நிலைக்கு மக்கள் வந்துள்ளமை மனதுக்கு வேதனையானாக உள்ளது. ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த ஆரம்ப கால போராளிகளுள் நானும் ஒருவன் என்ற வகையில் இதற்கு தார்மீக பொறுப்பை நானும் ஏற்றுத்தானாக வேண்டும்.

ஒரு காலத்தில் ஆயுதப் போராட்டத்தின் தேவை இருந்தது. ஆனால் அந்த களச்சூழல் சர்வதேசத்தின் பார்வைகளை வைத்து, அதிலிருந்து விடுபட்டு மாற்றுப் பொறிமுறைக்குச் செல்ல வேண்டியிருந்ததும் அவசியமாக இருந்தது.

ஆனால் 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஆயுத வழியிலான போராட்டம் எமது மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கு சாத்தியமானதொன்று அல்ல என்று அது வெளிப்படையாக எடுத்தக் கூறியது.

அதனால் நாம் நாடாளுமன்ற ஜனநாயக வழியில் எமது அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ளக் காலடி எடுத்து வைத்திருந்தோம். அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

இதேநேரம் ஆயுதப் போராட்டம் சாத்தியமற்றதென்று தெரிந்தும் தமது நலன்களுக்காக ஆயுதப் போராட்டம் தான் சாத்தியம் என்று கூறி மக்களைத் தவறாக அல்லது வலுக்கட்டாயமாக இழுத்து, அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்று, தற்போது மக்களை இத்தகைய நிலைக்கு கொண்டுவந்து விட்ட தரப்பினரை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

அதே நேரம் பிரபாகரன் யுத்தத்தை ஒருபோதும் தானாக விரும்பிக் கைவிடவில்லை. மாறாக எல்லாமே முடிவுக்கு வரவேண்டிய கட்டாய சூழலில் யுத்தமும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் புலிகளின் அமைப்பின் வழிமுறை தோற்றுப்போனது உண்மையே.

அதற்காக தமிழ் மக்கள் தோற்றுப் போனதாக அர்த்தப்படாது. தமிழ் மக்கள் ஒருபோதும் தோற்றுப் போகவும் இல்லை. தோற்றுவிடவும் மாட்டார்கள்.

அந்தவகையில் தமிழ் அரசியல் தரப்பினர் கடந்தகால வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளாத வரை வரலாறு அதை மீண்டும் மீண்டும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கும்.

அதன் அடிப்படையில் நிலையான சமாதானம் மற்றும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கான பன்முகத் தன்மையை உள்ளடக்கிய வளமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்துக்கு தமிழ் தரப்பினர் அர்ப்பணிப்புடன் உழைக்க முன்வரவேண்டும் .– என்றார்.

இதனிடையே இந்த ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர், அது தொடர்பில் காலக்கிரமத்தில் தீர்வினைப் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார் என உறுதியளித்தார்.

# ஈரானிய தூதரகத்தில் ஹக்கீம் நேரில் சென்று இரங்கல் பதிவு





**(கே.எ.ஹமீட்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நேற்று ஈரானிய தூதுவர் கலாநிதி அலி ரிஸா டெல்கோஷை சந்தித்து, ஹெலிக்கொப்டர் விபத்தில் காலமான அந்நாட்டு ஜனாதிபதி கலாநிதி செய்யத் இப்ராஹிம் ரயிசி, அவருடன் பயணித்த வெளி விவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் அவர்களுடன் உயிரிழந்த தூதுக் குழுவினருக்காக நேரில் ஆறுதல் தெரிவித்தார். ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப புத்தகத்தில் தமது இரங்கல் செய்தியை அவர் பதிந்தார்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபிக்கும் கலந்து கொண்டார்.



# இலங்கை மீனவர்கள் 7 பேருக்கு புழல் சிறையில் விளக்கமறியல்!

இந்தியக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் கைது செய்யப்பட்ட ஏழு இலங்கை மீனவர்களும் ஜுன் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் கடல் வழியாக தூத்துக்குடிக்கு அழைத்துச்செல்லப்பட்டு தருவைகுளம் கரையோரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய, மாநில உளவுத்துறை விசாரணைகளைத் தொடர்ந்து இலங்கை மீனவர்கள் இராமநாதபுரம் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் எதிர்வரும் ஜுன் 3 ஆம் திகதி வரை அந்த மீனவர்களை சென்னை புழல் சிறையில் தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே, இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், 4 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நாடு முழுவதும் மழை நீடிக்கும் கடலில் பலத்த காற்றும் வீசும்!

## மீனவர்களை அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை

(கனகராசா சரவணன்)

நாடு முழுவதும் தென்மேல் பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக தாபிக்கப்பட்டு வருகின்றமை காரணமாக தற்போது நிலவும் மழை நிலைமையும் காற்று நிலைமையும் மேலும் தொடரும் எனவும், கடலில் 60-70 கிலோ மீற்றர் வரை காற்றின் வேகம் அதிகரிக்கும் எனவும், எனவே கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் அவதானமாக செயற்படுமாறும் தேசிய வளிமண்டல அவதானிப்பு மையம் அறிவித்துள்ளது

வானிலை அவதானிப்பு மையம் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

**மழை**

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**காற்று**

கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக் கூடும் அத்துடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக் கூடும். அத்துடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடல் நிலை**

கொழும்பிலிருந்து காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இக் கடற்பரப்புகளில் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கல்பிட்டியிலிருந்து கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் கடல் அலைகள் 2.5 - 3.0 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும். - என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# பருவப்பெயர்ச்சி மழை காரணமாக டெங்கு நுளம்பு பரவல் அதிகரிக்கும்

தென்மேற்று பருவப்பெயர்ச்சி மழை காரணமாக எதிர்வரும் நாள்களில் டெங்கு நுளம்பு பரவலில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 23 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதனிடையே யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் தற்போது டெங்கு பரவல் அதிகரித்து வருவதாக வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவிக்கின்றார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலையால் கொழும்பு நகரில் ஏற்படக்கூடிய டெங்கு அபாயத்தை குறைப்பதற்கான உடனடி தீர்மானத்தை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற, டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.




# சிறை அதிகாரிகள் சுகவீன விடுப்பில் ஒழுக்காற்று விசாரணை முன்னெடுப்பு

சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் சுகவீன விடுமுறை பெற்று கடமைகளுக்குச் சமுகமளிக்காமை தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில அதிகாரிகள் நேற்று முன்தினம் நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருந்தனர் என சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் காமினி பீ.திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் நாட்டின் பிரதான சிறைச்சாலைகளின் அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

தமது சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கோரி இந்தஉ பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகளின் ஒன்றியம் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளமையுடன், அமைச்சரவைப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.



# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்ற இரதோற்சவம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. நேற்று செவ்வாய்க் கிழமை காலை தேர்த்திருவிழா இடம் பெற்றது.

நேற்றுக் காலை உற்சவ மூர்த்தி களுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றமை யைத் தொடர்ந்து உற்சவ மூர்த்தி கள் உள் வீதி, வெளி வீதி உலா வந்த னர்.

அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த் திகள் தேரில் ஆரோகணிக்க, ஆயி ரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடிக்க, பஞ்சரத பவனி இடம் பெற்றது.

தொடர்ந்து பஞ்ச மூர்த்திகளுக்கு, தேரில் பச்சை சாத்தப் பட்டதைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் ஆல யத்தில் எழுந்தருளினார்கள்.

இன்றையய தினம் தீர்த்த உற்சவம் இடம்பெறவுள்ளது.








